**பதவி வெற்றிட அறிவித்தல்**

**கல்வி, தகவல் ரொதாழில் நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**
**சபரகமுவ மாகாண சபை**

இலங்கை கல்வி நிர்வாக சேவையன் 1 ஆம் தரத்தின் அலுவலர்களை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் பதவிக்கும் வலய கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கும் தேர்ந்தெடுத்து நியமனம் செய்தல் - 2024

சபரகமுவ மாகாண கல்வி அமைச்சின்கீழ் தற்போது வெற்றிடங்களாக இருக்கின்ற பதவிகளுக்காக இலங்கை கல்வி நிர்வாக சேவையன் 1 ஆம் தரத்தின் தகைமைகளையுடைய அலுவலர்களிடமிருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | வெற்றிடமாக இருக்கின்ற பதவி | அனுமதிக்கப்பட்ட தரம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் | இ.க.நி.சே 1 | 01 |
| 02 | வலய கல்விப் பணிப்பாளர் (பலங்கொட) | இ.க.நி.சே 1 | 01 |
| 03 | வலய கல்விப் பணிப்பாளர் (கேகாலை) | இ.க.நி.சே 1 | 01 |
| 04 | வலய கல்விப் பணிப்பாளர் (எம்பிலிபிட்டிய) | இ.க.நி.சே 1 | 01 |

**02. தகைமைகள்**

I. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தரத்தித்தின் உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

II. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் முன் அண்மித்த 05 வருட காலத்துக்குள் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழும் தண்டனைக்கு ஆளாகாதவராகவும் அத்துடன் தற்போது எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் நடைபெறாமலும் அத்தகைய நடவடிக்கையொன்றுக்கு ஆளாவதற்கு நியமமாக இல்லாத ஒருவராகவும் இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன் அண்மித்த 05 வருட காலத்துக்குள் உரியவாறு அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் திருப்திகரமான சேவைக் காலமொன்றையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினமான **2024.10.30** ஆம் திகதி பதவியில் சேர்த்துக் கொள்ளல் தொடர்பான எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**03. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை**

I. விண்ணப்பதாரர்களினால் இத்துடன் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய $A_4$ அளவிலான தாளில் ஒழுங்கு செய்த விண்ணப்பத்தை முறைப்படி பூர்த்தி செய்து 2024.10.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன் திணைக்களத் தலைவர் மற்றும் தொடர்புடைய அமைச்சின் செயலாளர் மூலமாக (சபரகமுவ மாகாணத்தின் விண்ணப்பதாரர்கள் தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தொடர்புடைய மாகாண செயலாளரினதும் பிரதான செயலாளரினதும் சிபார்சுகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்) ''செயலாளர், கல்வி தகவல் தொழில் நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

II. அதேபோன்று ஒரு பதவியிலும் கூடிய பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இருப்பார்களாயின் அவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தொடர் இல. 01 இன் கீழ் விண்ணப்பிக்கும் பதவிகளை முன்னுரிமையின்படி தொடர் அடிப்படையில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தரத்தின் பதவிகளுக்காக அலுவலர்களை தெரிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும்.

III. குறிப்பிட்ட திகதிக்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் கோரப்பட்ட இறுதித் திகதிக்கு குறிப்பிட்ட தகைமைகளை பெற்றிருக்காத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தாமதமடைதல் அல்லது காணாமற் போதல் என்பன தொடர்பிலான எவ்வித முறைப்பாடுகளும் சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில் நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.moe.sg.gov.lk என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.)

04. **தேர்ந்தெடுக்கும் முறை :-**

I. இத்துடன் காட்டப்பட்டுள்ள மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்கள் சபரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டு, சேவை முதுமை மற்றும் திறமைகள் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். அந்தப் புள்ளிகளின் அடிப்படையில் மிகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் அலுவலரை/அலுவலர்களை தொடர்புடைய பதவிகளுக்கு தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் புள்ளி வழங்கும் திட்டத்தை www.moe.sg.gov.lk என்ற இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

**குறிப்பு** :- தகைமைகளை நிரூபிக்கக்கூடிய அனைத்துச் சான்றிதழ்களினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகள், தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதற் பத்திரத்தின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகள் என்பனவற்றை விண்ணபத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

II. ஏவ்வாறாயினும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது விண்ணபதாரர்கள் தமது விருப்பத்தின்படி வெற்றிடப் பதவிகளை பெயர் குறிப்பிடலாம். அத்துடன் அப்பதவிகளுக்கு நியமனம் செய்யும்போது அந்த விருப்பம் தெரிவிப்பையும் கவனத்திற் கொள்ளப்படும்.

05. இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கக்கூடியதாக இருந்தபோதிலும், நடத்தப்படுகின்ற முறைப்படியான நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளையும் கவனத்திற் கொண்டு மேற்கூறிய பதவிகளுக்காக தெரிவாகும் அலுவலர்கள் அந்த வெற்றிடங்களுக்காக தேர்ந்தெடுத்து நியமனம் செய்தல், ஏற்புடைய இடங்களுக்கு நியமித்தல் மற்றும் நடத்தப்படுகின்ற கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சை தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பிலும் சபரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில் நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

06. இவ்வறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகளுக்கிடையே ஒவ்வாமை ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலப் பிரதியே சரியான பிரதியாகத் தீர்மானித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பி.ஏ.ஸீ.பீ. பமுணுஆரச்சி,
செயலாளர்,
கல்வி, தகவல் தொழில் நுட்ப மற்றும் கலாசார அலுவல்கள் அசைச்சு,
சபரகமுவ மாகாண சபை.

2024.10.01.